உ

கணபதி துணை.

பணவிடு தூது.

இஃது

திருத்தணிகைக்

கந்தப்பையர்குமாரர்

சரவணப்பெருமாளையரால்

பரிசோதிக்கப்பட்டு

இவராலும்

பொய்கைப்பாக்கம்

பழனியப்பமுதலியார்குமாரர்

அப்பாசாமிமுதலியாராலும்

பூம்பாவை

அண்ணுசாமிமுதலியார்குமாரர்


சிங்காரமுதலியார்

கேட்டுக்கொண்டபடி.

சென்னபட்டணத்தில் - கல்விவிளக்க வச்சுக்கூடத்தில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

விளம்பி ௵ தை ௴

இதன் விலை. அணா—அ.



உ

கணபதிதுணை.

பணவிடு தூது.

காப்பு.

வெல்லுந்திறன்மாதைவேங்கடேசேந்திரன்மேற் *
சொல்லும்பணவிடுதூதுக்கு-வல்லவொரு *
கம்பகும்பத்தானையன்றுகைக்கழங்குபோலாடுங் *
கம்பகும்பத்தானைமுகன்காப்பு. *

பார்தந்தவேதன்பதுமமுகத்துதித்த *
சீர்தந்ததெய்வத்திருக்குலத்தான்-ஏர்தந்த *
முப்புரிநூன்மார்பினான்முதலெல்லாம்விளங்குஞ்
சுப்ரமண்யபிம்பமன்னசோதியான்-ஒப்பில்
உபயகுலோத்துங்கனாண்மையரிச்சந்த்ரன்
அபயனகளங்கனனகன்-சபைநிறைந்த
போஜனளகேசன்பூச்சக்ரவாளமனு
ராஜவிஜயரகுராமன்-வீசுபுகழ் *
மாணாபரணன்வரிசைத்துரைப்பெருமாள் *
நானாகலைதெரிந்தநாகரிகன்-மீனவன்றன் *
மண்டலமுஞ்சோழவளமண்டலமுந்தான்கவித்துக் *
கொண்டதனிக்கொற்றக்குடையினான்-வெண்டரள *
வாபரணமாமுலையார்க்காசைவலைபூட்டுகழைச் *
சாபமதரூபசௌந்தரியன்-கோபாலன் *
செம்பொனடிவணங்குஞ்சென்னியான்வேற்றரசர் *
பைம்பொன்முடிவணங்கும்பாதத்தான்-விம்பமணிக் *
கங்கணமுமேற்போர்கவிகளெல்லாந்தீர்ப்பனென்று *
கங்கணமுநீங்காக்கரதலத்தான்-சங்கையுள்ள (௯)

வெஞ்சொற்களைந்துகல்விமேலோரெடுத்தியம்புஞ் - *
செஞ்சொலுகந்ததிருச்செவியான்-விஞ்சுபெருங் - - *

கல்விக்கடலனையான்கண்டோர்பசிதீர்க்குஞ் - - - *
செல்வக்கருணைத்திருமுகத்தான்-மெல்லப் - - - *

புடைபரந்ததெள்ளமிர்தம்போற்கருணைவெள்ளங் - *
கடைபரந்தசெங்கமலக்கண்ணன்-புடைசென் - - *

றடுத்திட்டபேர்க்குமயலார்க்குமுண்மை - - - *
நடுத்திட்டமேயுரைக்குநாவான்-எடுத்தமத - - *

வோங்கலிருநான்கும்பொறையுயிர்ப்பவொண்புவனந் - *
தாங்கவளர்ந்ததடம்புயத்தான்-நீங்கா - - - *

இடும்பைக்கொடுங்கலிதீர்த்தெண்ணில்பலகோடி - - - *
குடும்பப்ப்ரதிஷ்டைசெய்தகோமான்-அடும்போரில் - *

வானெதிர்த்தமேருமலைவந்தெதிர்த்தாலும் - - *
தானெதிர்த்துவெல்லுந்தனுவிஜயன்-சேனைத் - - *

தளங்கும்பிடக்கனகதண்டிகையுந்தானும் - - *
விளங்குந்தனிப்புருஷமேரு-வளம்பெறுமித் - - *

தேசவிவகாரஞ்செகத்திலுள்ளசெய்திதனை - - *
வாசல்விவகாரமற்றெவையும்-யோசனைசெய் - - *

மந்திரிமாருமறுமன்னரேவலரும் - - - *
தந்திரிமாருந்தளாதிபரும்-முந்தும் - - - - *

தினசரிதக்காரர்களுஞ்சீமைக்கணக்கங் - - - *
கனுதினம்வாசிக்குமவரும்-கனமுடைய - - - *

வர்த்தகருங்குர்ச்சராருமாராடருங்கொலுவில் - - *
தத்தம்வரிசைகொடுதாநிற்ப நித்தமொக்கச் - - - *

சாளிகைகட்டிவைக்குந்தந்திரமும்பிந்திவரும் - - - *
பாளையக்காரர்பணங்களுக்கங்-காளனுப்பும் - - *

வல்லமையுங்கேட்கும்வரியோலைக்குத்தரங்கள் - - *
சொல்லுவதிலேதினைவின்சூக்ஷமமும்-எல்லைகண்டு - *

கூறப்படாதகுளப்பாய்வுங்காற்பாய்வும் - - - *
ஏறப்பயிர்கொழுத்துமேற்பாடும்-பேறுதரும் - (௨௪)

தேவாலயத்திற்றினப்பூசைதப்பாமல்
வேவாளனுப்பும்விசாரிப்பும்-நேர்வாகக்

காணிக்கைக்காரர்கணக்குக்கேட்டவ்வவர்தந்
த்ராணிக்குத்தக்கதிட்டஞ்செய்வதுவும்-பாணித்துச்

செய்யுதயபயமுஞ்சேருஞ்சனங்களுக்கென்
னையன்புரியுமாவணைப்பும்-வையகத்தில்

மற்றொருவருக்குவருமோவாராதென்று
கொற்றவரெல்லாமெடுத்துக்கொண்டாட-முற்றும்

திருவடிதேசமொருசெங்கோல்செலுத்தும்
பருவமெல்லாநன்றாப்பழகி-ஒருமுகங்கொண்

டட்டவணையிட்டதுபோலத்தனையுந்தானிருந்து
சட்டமிடுகின்றசமூகத்தான்-தொட்ட

நிலையானமேருநிகரானநேரி
மலையானன்கியாதுமலையான்-உலகுய்யத்

தோற்றினான்றண்ணளியாற்சொற்பாவலர்கவிவெப்
பாற்றினான்காவேரியாற்றினான்-நாற்றிசைக்கும்

காட்டினான்றன்புகழைக்கற்றோர்குடும்பநிலை
நாட்டினான்சோழவளநாட்டினான்-கட்டும்

நிதியான்மிகுத்தநிறைவாழ்வளகைப்
பதியாந்தென்மாதைப்பதியான்-அதிர்திரைப்பால்

வேலையான்போதிகருணைமேன்மையானாவலர்பா
மாலையான்றாமரைப்பூமாலையான்-பாலெகினத்

தேசியானீன்றசெகங்காத்தருளமரர்
வாசியான்பொற்கவனவாசியான்-நேசமிலா

வஞ்சரைத்தான்சற்றுமதியானாதிருகுடிக்
குஞ்சரத்தான்வெற்றிமதகுஞ்சரத்தான்-விஞ்சும்

படியானதுபுகழும்பான்மையான்மீனக்
கொடியான்வெள்ளன்னக்கொடியான்-வடிவே

லரசானவெற்றியானாலமதனேழு
முரசாயதிர்மும்முரசான்-பரசுமனா (௫௧)

நீதிபெறுமுத்ரைநிருபங்கோபாலனென - - - *
ஆதிமுதலொப்பமிடுமாணையான்-பூதலத்தில் - - *
திக்கெல்லாம்வந்ததிறையளக்குஞ்செங்கோன்மைச் - *
சொக்கநாதேந்த்ரதுரந்தரிகன்-முக்யமுள்ள - - *
பூசுரர்க்குத்தானமிட்டும்பூசைபலசெய்துமிந்தத் - - *
தேசமுற்றுங்காக்கவந்துசென்மித்து-ராசரிக - - *
முத்ரைபெற்றரங்ககிர்ஷ்ணமுத்துவீரேந்த்ரனருள் - - *
வைத்தகொற்றவாசலுக்கோர்மந்திரியாய்-மொத்தக் - *
கணக்கைவகைகண்டுகற்பித்தபொக்ஷிப் - - - *
பணக்குறைவாராமற்பணித்து-வணக்கமிலாக் - - *
கூடலூர்க்கம்பைமுதற்கொண்டுமலையாள - - - *
நாடளவுமாணைநடத்துவித்துப்-போடுகின்ற - *
வீட்டுவரியெப்பொழுதும்வேண்டாமெனநிறுத்திக் - *
காட்டுவழிச்செல்வாரைக்காப்பாற்றி-ஆட்டுபுனற் - - *
கங்கைநதிமுதலாக்கன்னித்துறைவரைக்கும் - - *
எங்கணுமின்றுனென்றிலக்காக்கிச்-சிங்களவர் - - *
மச்சர்விலாடர்மகதர்கலிங்கத்தர் - - - - *
குர்ச்சரர்கோசலர்கொங்கணர்-உச்சீனர் - - - *
மாகதரீழர்வடுகரமிவாளர் - - - - *
கேகயராரியர்கேரளத்தர்-ஓகைபெறும் - - - *
வங்கர்குலிந்தர்மராடர்கருநாடர் - - - *
கொங்கர்குகுதர்குழாநெருங்க-எங்கும் - - *
நிறைகொலுவாய்த்தானிருந்துநீதிமனுவாகித் - - *
திறைகொணர்ந்தவேந்தர்தினமும்-முறைமுறையே - *
தெண்டனிடும்வாசற்றிருவேங்கடநாத - - - *
மண்டலிகன்பெற்றவரபாலன்-பண்டைநாள் - - *
ஆதிசுப்ரமண்யரமரர்சிறைமீட்கவந்தச் - - *
சோதிமயவடிவாய்த்தோன்றியபின்-நீதிதிகழ் - *
ஆறுமுகம்வெவ்வேறவதாரமாகியிந்நாள் - - *
வீறுபுவிகாக்கவந்தமேன்மைபோல்-பேறுமிகத் - (௫௪)

தன்னுடனேயைவர்சகோதரருந்தானுமெழின்
மன்னவர்சிகாமணியாய்வந்தபிரான்-மின்னும்
மருக்குங்குமமார்பன்மார்க்கண்டவாழ்வாய்
இருக்குந்துரைவெங்கடேசன்-பெருக்கமுள்ள
தேசப்ப்ரதானமெனுந்தென்மதுரைவீட்டுக்கு
வாசத்ப்ரதானிமகாராசன்-ராஜரிக்க
கிம்புரிமால்யானைசொர்ணகிர்ஷ்ணபூபாலனுக்குத்
தம்பியெனவந்தயாளுவாய்-அம்புவியில்
எண்ணெண்கலாஞானமெல்லாந்தெளிந்தமணி
வண்ணப்பெருமாள்மகிபதியும்-தண்ணளியால்
தேசமோராணைகொண்டுசெங்கோன்மைசெய்யவந்த
ராசகோபாலநராதிபனும்-நேசமிகு
துங்கனகளங்கன்றுலங்குகனகாவியப்ர
சங்கன்கனகசபாபதியும்-இங்கிதஞ்சேர்
திங்கட்டிருமுகத்திற்செங்கமலைகூத்தாடும்
வெங்கட்டராமவிதரணனும்-இங்கிவர்கள்
பின்னுதித்தநால்வர்பிராணபதத்தம்பியரா
முன்னுதித்துவந்தமுகூர்த்தவான்-மன்னுமர
விந்தமலரோனீன்றவிப்ரகுலதீபமென
வந்தவெங்கடேசமகிபாலன்-சந்ததமும்
தாய்த்துணைபோலெங்கள்தமிழ்ப்பாண்டிநாடாள
வாய்த்தவெங்கடேசமகிபாலன்-வேய்த்தடந்தோள்
தேனனையசொல்லியர்க்கோர்சீவகசமானவெகு
மானவெங்கடேசமகிபாலன்-தானுகந்து
முத்தமிழ்வாணர்க்குண்முழுநோக்கமென்னிடத்தில்
வைத்தவெங்கடேசமகிபாலன்-புத்தமுத
சீதசந்த்ரபிம்பத்திருமுகத்தான்செய்யதமிழ்
மாதைவெங்கடேசமகிபாலன்-பூதலத்தை
ஏகசக்ரமாப்புரக்குமிராஜதானிக்கிணங்கும்
பாகுபெற்றநெல்வேலிப்பட்டணத்தில்-ஓகையுடன் (௬௧)

மேலாமரமனைக்குண்மேவிக்கொலுவிருந்து
மாலைபுகுந்துவரும்வேளை-நாளுதிக்கும்

கட்டியங்களார்ப்பக்கரடமதயானையின்மேற்
கொட்டியடமராங்கள்கொஷிப்ப-எட்டிப்

பேரிமுழங்கப்பெரியபதினெட்டுவகை
பூரிநெடுவாத்தியங்கண்முன்னதிர-நேரே

நடநாடகசாலைநட்டுவன்மார்தாளத்
துடனேசங்கீதமொலிக்கப்-புடையே

அருவிவல்லயத்திலழுந்துபசுந்தங்கம்
இருபுறமுமின்னிட்டெறிப்பத்-தெருநிறையக்

கொஞ்சிவருமச்சிக்குதிரைகணிர்த்தம்புரியச்
சஞ்சுபவர்க்கந்தளதளென-மிஞ்சும்

இருளறுதீவட்டிகளெண்ணிலமுன்செல்ல
மருவுபலதீவேட்டுவர்க்கம்-பொருவில்

பகல்வர்த்தியித்தனையும்பக்கநெருங்கி
இகலிட்டிரவுபகலேய்ப்பத்-தகுமுபய

சாமரைகள்வீசத்தமனியப்பொற்பாவாடை
காமருபொற்காளாஞ்சிகைக்கொண்டு-கோமளமாச்

செல்வார்வரிசைகொடுசெம்பொற்பணியிலங்க
வில்வாள்பரிசையொடுவேண்டுவன-பல்வகையாம்

ஆயுதக்காரரளவிலர்முன்னேநடக்கத்
தூயபலதண்டிகைகள்சூழ்ந்துவர-நாயகமாய்த்

தங்கமுமுத்துந்தனிப்பவளமாகியுமே
எங்குமொளிவிட்டெறிப்பதாய்-ரங்ககிர்ஷ்ணன்

முத்துவீரேந்த்ரன்முழுவரிசைதந்தனுப்பும்
கொத்துமணித்தண்டிகைமேற்கொண்டேறிச்-சித்தம்

விரும்பிபரமேசன்போல்வீதிவலம்வந்துத்
திரும்பியரமனைக்குட்சென்று-பெரும்பார்க்

கிறையவனெங்கோமானிரங்கவிலாசத்தே
நிறைகொலுவாய்வீற்றிருக்குநேரம்-நறைமலர்ப்பூங் • (௮௪)

கொத்தலர்தார்மார்பன்கொலுவிருக்குஞ்சிங்காரம் - *
அத்தனையுங்கண்டேனகங்குளிர்ந்தேன் - மெத்தமெத்த - - *

போசன்சமுகம்பொலிவென்பார்மாதைவெங்க - *
டேசன்சமுகத்துக்கோமோ - ராசர்பல - - - - *

கூடுஞ்சமுகங்குறையாதுலக்ஷ்மிகூத் - - - *
தாடுஞ்சமுகமதுவன்றோ - தேடுகின்ற - - - *

வாக்கில்வியாழமிங்குவந்ததென்றுலோகமெல்லாம் - - *
காக்குமெசமானெதிர்போய்க்கையெடுத்தேன் - பாக்ய - *

துரந்தராவன்னசத்ரசோமாபுவன - - - *
புரந்த்ராமெய்ஞ்ஞானபோதா - நிரம்புகொடைக் - - *

கன்னகவிக்குக்கனகாபிஷேகஞ்செய் - - *
மன்னுசவுந்தரியமன்மதா - பொன்னாரம் - - *

பூட்டியமார்பாபுசபெலவீமாவிசயா - - *
நீட்டியவேற்கைச்செயதுங்கா - நாட்டியதோர் - - *

யாகாதிகர்மமியற்றியிமையோர்க்கும் - - - *
ஆகாரநல்குமபிராமா - யோகமனே - - - *

தீராரணதுங்காசெந்தமிழோர்துன்பபரி - - - - *
காராவனவரதகல்யாண - பாராளும் - - - *

மானபராவென்றுமகாராசன்கீர்த்தியென்னால் - - *
ஆனதுமாத்திரங்கொண்டாடினேன் - தானும் - - *

திருக்கைதனைநீட்டித்திரள்சமுகந்தன்னில் - - - *
இருக்கைமகிழ்ச்சியுடனீந்தான் - உருக்கியெங்கோன் - - *

தன்னுடையசித்தத்தேசந்தோஷிங்கைமீற - - *
என்னுடையவண்ணமரங்கேற்றுதலும் - மின்னுமுழு - - *

நீலமொன்றுகைக்குநிறைந்தகணையாழி - - - *
சாலுவைசெம்பொற்சரப்பணியும் - மேலும் - - *

விரும்புபலபூஷணங்கண்மிக்ககட்டுவர்க்கம் - - - *
அரும்பரிசிலத்தனையுந்தந்து - திரும்பவுமென் - - - *

பாமாலைபெற்றவிலைக்குப்பதின்மடங்காச் - - - *
சீமான்கொடுத்ததிரவியமே - நாமம் - - - (கூகூ)

பணமேயெனப்படைத்தபாக்கியவானேவங் - - - *
கணமேயென்னாருயிரேகண்ணே-குணநிதியே - - *

சாம்புநதிதீரத்துஞ்சாலிக்கிராமத்தும் - - - *
மேம்படுசித்தாதிகள்செய்வித்தையிலும்-தேம்பொழியும் *

பன்றிமலையினுநீபண்டுபிறந்தாயங்கு - - - *
நின்றுலகமெங்குநிறைந்திட்டாய்-ஒன்றுகேள் - - *

ஈசனுனக்கொப்பென்பாரீசனையுண்டாக்கியவன் - - *
பூசனைநீசெய்விப்பாய்புண்ணியா-பேசுங்கால் - - *

மூவர்கடவுளர்கண்மூவரிலொன்றான தனித் - - - *
தேவன்மகிமைதனைச்சென்றேத்தற்-காவதுபோல் - - *

சின்மயமாமுன்னுடனேசெம்புவெள்ளிசேர்ந்தாலும் - - *
உன்மயமேயெங்குமுயர்ச்சிகாண்-பொன்மகளை - - - *

மார்புதனின்மாயோன்வரிசையாவைத்துநின் - - - *
பேர்மகிமைகண்டாய்பெரியோனே-யாருலகில் - *

ஆன்றபலகோடியாத்மவர்க்கமத்தனையும் - - *
ஈன்றபிரமனுநீயீன்றமகன்-தோன்றுமொரு - - *

நற்பொருளுண்டாங்கவன்றனுமிரணிய - - *
கெர்ப்பனென்றுசொல்வதுநான்கேட்டிலனோ-கற்பனையால் - *

ஆங்கவனுண்டாக்குமகிலாண்டகோடியெல்லாம் - - *
தாங்குமகமேருவுநீதானன்றோ-தீங்கின்றி - - - *

எண்ணான்கறம்வளர்த்திரக்ஷிக்குங்காந்திமதிப் - - - *
பெண்ணாரமுதுபிறந்ததலம்-அண்ணலே - - *

முந்திமயமானமுழுச்சிமயவெற்பென்பார் - - *
அந்தமலையுன்றன்மயமல்லவோ-எந்தையார் - - *

முந்தப்பதஞ்சலிக்குமுன்னின்றுகூத்தாடும் - - - *
அந்தக்கனகசபையார்வடிவம்-நிந்தையிலா - - *

உன்மரபுசொல்லவொருகோடிநாள்செல்லும் - - - *
என்மனதில்வந்ததியம்புவேன்-நன்மைதரும் - - *

பல்லங்கிக்காசுபழையசம்பங்கிக்காசு - - - - *
பூல்வட்டக்காசுபுலிக்காசும்-அல்லாமல் - - (௩௰௪)

சந்தமிக்காசுதருகலுத்தான்காசுமுதல்
அந்தமோடாளிட்டான்காசென்றும்-செந்தீக்

குருகுபவளக்காட்டிலுள்ளவராகன்
வருபிரதிபுண்யவராகன்-பெருகுமொரு

சென்னபட்டணத்தான்சிவராயன்மம்மதுகான்
மன்னுநிசானிவராகனுடன்-சொன்னகிரிச்

சீரங்கராயனெனுஞ்செம்பொன்வராகனிவர்
பேரொங்குமானபெரியோர்கள்-சேர

உனக்குமுன்னேதோன்றுமுயிர்த்துணைவரொன்றால்
மனக்கவலையேதுனக்குமன்று-கனக்கும்

குதிரைக்குளம்புகுடிக்கெல்லாமுப்பா
அதிகக்கிளைக்கூட்டமானாய்-நிதியக்

கடவுளேயாங்கவர்க்குக்காவேரிகங்கைக்
கிடையிலுள்ளதேசமெவையும்-அடைவில்

நிறைபெறுதீவாந்தரமுநிண்ணயமாமேழு
கரைதுறையுநீகொடுத்தகாணி-துரைமகனீ

அங்குமிங்கும்போக்குவரத்தாயிருப்பாயாங்கவரும்
இங்குமங்கும்போய்வந்திருப்பார்கள்-உங்களிலே

பேதமுண்டோவாசற்ப்ரதானிபுத்தனுக்கும்
ஏதமிலாநற்பன்னிராசிக்கும்-போத

மலையாளதேசமணியங்கொடுத்தாய்
தலையாகநீயிருக்குந்தானம்-தொலையாத

தென்மதுரைச்சீமைமுதற்றென்கன்னியூர்வரைக்கும்
தன்மதுரைநீயேசகலருக்கும்-தொன்முறையால்

வல்லதிட்டுதுக்காணிவாசற்றளகர்த்தர்
செல்லுமற்றைக்காசெல்லாஞ்சேவகர்கள்-எல்லாரும்

அங்கங்கேநாணயங்களாகவைத்தாயுன்னாணை
எங்கெங்கேசெல்லாதிறையோனே-எங்களுக்குத்

தாதையும்பெற்றெடுத்ததாயும்போலாதரிக்கும்
மாதைவெங்கடேசேந்த்ரன்வாசலிலே-சீதமலர்ப் (௱௪௯)

பைந்தொடியாள்கூத்தாடும்பாக்யநிறைபொக்ஷீமுனக் - - *
கந்தரங்கமானவரசிருக்கை-சொந்ததலம் - - - *

அத்தலமேயானலுமஷ்டதிக்குநீயர்கி - - - - *
எத்தலமுஞ்சட்டமிடுவிப்பாய்-கர்த்தனே - - *

கொங்குமுளையென்றுங்குணுங்கலூர்வெட்டென்றும் - - *
வெங்கணழகாத்ரிவெட்டென்றும்-தங்குமொரு - - *

தூற்றுக்குடியான்சுழிமுல்லாவெட்டென்றும் - - *
வேற்றுச்சடக்கனிட்டவெட்டென்றும்-தோற்றுபுதி - *

வெட்டென்றுஞ்சோழியன்வெட்டென்றும்ராமசந்த்ரன் - - - *
வெட்டென்றுமெம்பெருமான்வெட்டென்றும்-திட்டமாம் - - *

மல்லன்சிகாபதியான்வாழ்குருகன்வெட்டென்றும் - *
வெல்லுமிராமையன்வெட்டென்றும்-சொல்லுமொரு - *

கொப்பனைவெட்டுக்குறுநண்டுக்கால்வெட்டு - - *
மெய்ப்புளகாரோட்டிவெட்டென்றும்-செப்பியமைக் - *

காட்டுவெட்டுமத்தகிரிக்கண்டிராயன்திருவாங் - - *
கோட்டுமின்னன்மாற்றுக்குறைச்சலென்றும்-காட்டுகின்ற - *

வெந்திருகல்கோழிவிழுங்கவிருப்பூறல் - - *
செந்தழலில்வேஞ்சுத்தசேவையென்றும்-அந்தமிலாக் - *

கள்ளன்புதுமங்கலக்குடியான்செப்பாடல் - - - *
புள்ளறுதல்வேவல்புழுங்கலென்றும்-வெள்ளியிற்பொற் - *

பூச்சென்றும்பூச்சையநாய்க்கன்பணமென்றும் - - *
தேய்ச்சவுணாயென்றுமுழுச்செம்பென்றும்-வாய்ச்சபழ - *

மூந்தினவெட்டென்றுமூர்த்திசெட்டிவெட்டென்றும் - *
விந்தைமயிலாப்பூர்வெட்டென்றும்-சந்தேகம் - - *

அச்சழிவுவீரராயன்பணமாண்டான்வெட்டோ - - *
டுச்சிதமாமோசைப்பணமென்றும்-கிச்சம்மாள் - - *

தன்னுடையவெட்டென்றுஞ்சங்கரசெட்டிபுது - - *
மின்னலென்றுநாகப்பன்வெட்டென்றும்-மன்னுகட - - *

னஞ்சையன்வெட்டுவிச்வநாதசெட்டிவெட்டென்றும் - *
மிஞ்சுகின்னராவுத்தன்வெட்டென்றும்-அஞ்சிறுகோ - (௱௪௪)

பாலசக்ரமென்றும்பலவுளூந்தூர்ச்சக்ரமென்றும்
சால்புதிருவையாற்றுச்சக்ரமென்றும்-மேலாம்
திருச்சிராப்பள்ளிச்சிறுசக்கிரமென்றும்
வரிசையாய்ப்பாரில்வழங்கித்-தெரிசிக்கும்
கோலம்பலவெடுத்துக்கோவேநீசெய்யுமிந்த்ர
சாலம்பிறரறியத்தக்கதோ-ஞாலமிசை
மேருவணுவாக்கிவிடுவாயணுவையொரு
பாரமகமேருவெனப்பண்ணுவாய்-ஈரமின்றி
வெட்டுவாய்வெட்டுதலைமீட்பாய்வரிந்திறுகக்
கட்டுவாய்கட்டுங்கயிறவிழ்ப்பாய்-கிட்டும்
உறவிற்பகைவிளைப்பாயுட்பகையாம்பண்டைக்
குறையைத்தவிர்த்துறவுகொள்வாய்-துறைவிட்டுக்
காடுநாடாக்குவாய்கண்விழித்துமூடுமுன்னே
நாடுகாடாக்குவாய்நம்பிநீ-தேடுங்கால்
வாராய்வலியவருவாய்வந்தாலுமுன்பின்
பாராய்பரிட்டவணைபண்ணுவாய்-தோராய
ஓடுவதுஞ்சொல்லாமலோடுவாய்செப்பிலிட்டு
மூடுவதுங்கண்டுமுடியாதே-தேடிப்
புதைத்திறந்துமற்றொருவன்போனாலொருவன்
அதைத்திறந்துபார்க்கவனாகி-வதைத்திறஞ்செய்
ஆடுபலிகொடுத்துமஞ்சனங்கள்போட்டுமதிற்
ஏடுபெறும்பேயைப்பிடித்தடைத்தும்-பாடுபட்டுக்
கண்டாலுங்கல்லாய்க்கரியாய்க்கிடப்பையுனக்
குண்டானசாலமெவர்க்குண்டுகாண்-மிண்டுபண்ணி
வெட்டியெடுத்துன்னைவீட்டுக்குளேயொதுங்கத்
தட்டுதராசுசெப்புதன்னிலிட்டுக்-கட்டடனே
காத்தாலுநீயடங்காய்கள்ளராவெளியினின்று
கூத்தாடுவாயிதென்னகோட்டாலை-சீத்துவமாய்
வாழ்வதுவுமுன்னுடையவாழ்வாமேவாழ்வொழித்துத்
தாழ்வதுவுமுன்னுடையதாழ்வாமே-கூழ்குடித்துர் (௱௬௧)

கட்டப்புடவையின்றிக்கந்தையுமாய்ச்சென்றுசெல்வர் - - *
இட்டப்பலகாலுங்கெஞ்சிப்போய்-முட்டமுட்டத் - - - - *

தாங்குவாரற்றுத்தடுமாறிராப்பகலாய் - - *
ஏங்குவாரேக்கமுமுன்னேக்கமே-ஓங்கும் - - *

பணமென்னுமுன்னைப்படைக்காதசென்மம் - - *
பிணமென்பர்கண்டாய்பெரியோய்-இணையிலாச் - *

சாவடியும்வீடுந்தலைவாசலுஞ்சதங்கைச் - - *
சேவடியுமைந்தர்களுந்தேவியரும்-பாவடியிட் - - *

டேறுங்கடும்பரியுமெச்சேவையுஞ்சுவைகள் - - - - *
ஆறுங்கலந்தவமுதுணவும்-வீறுங் - - - *

குடவண்டியுஞ்சலவைகொண்டுபயில்பின்னே - *
தொடரும்பிலுக்குஞ்சுகிப்பும்-குடையின்கீழ் - - *

வீதிவலம்வந்துலவும்வேடிக்கையுங்கடுக்கன் - - *
காதிலசைவதுவுங்கற்கட்டும்-சீதசந்தம் - - *

பூசுவதுஞ்சப்ரமஞ்சப்பூவணையிலாங்காரம் - - - *
பேசுவதுமையன்பெருமையே-வீசிநிற்கும் - - *

வட்டவிசிறிமருங்கசையக்கம்பளமேல் - - *
இட்டகொலுவோடினிதிருந்து-நட்டதுட்டி - - *

ஏதுகுடிநிலுவையேதுவரியோலை - - - *
ஏதுகழிவுபிசகேதென்னச்-சோதி - - *

நிலைவிளக்கின்பக்கலிலேநின்றுகொண்டுசெய்தி - - *
சிலகணக்கர்விண்ணப்பஞ்செப்பப்-பலகணக்கும் - - *

நிச்சயமாக்கேட்டுநில்வரிக்குக்காவ்வாசி - - - *
வைச்செழுதிவிட்டபுதுமானியத்தில்-தைச்ச - - *

பொறுப்புக்களைவாசிபுன்செய்க்கிரட்டி - - - *
அறுப்புத்தொகைபோட்டதற்கு-நிறுக்கதனில் - - *

உள்ளபடிகூட்டொடுக்குமுத்தாரமும்பிசகும் - - *
தள்ளதிலேபண்ணைநஷ்டந்தள்ளாதே-கொள்ளையோ - - *

ஊர்மணியக்காரனையிங்குள்ளேயழையுமென்று - - *
பேர்வழியேரொக்கப்பிறிவெழுதிப்-பாராளும் (௱௭௪)

திட்டமெல்லாமுன் னுடையதிட்டமவர்மனியச்
சட்டமெல்லாமுன் னுடையசட்டமே-அட்டவணைச்

சீட்டுப்பதிவைத்திரும்பக்கூட்டித் துணாமுன்
கேட்டுக்கழித்ததெல்லாங்கிண்டிப்பார்த்-தோட்டுக்

கிலக்காத்தொகையிட்டெழுதியேநெஞ்சைக்
கலக்காதவண்ணங்கலக்கி-அலக்கழிக்கும்

பிள்ளைமார்சற்றேயுன்பேர்கேட்குமுன்னரந்தக்
கொள்ளையெல்லாந்திராதோகோமானே-உள்ளபடி

வட்டமென்றுநாணயத்தின்வட்டமென்றுமெண்ணிக்கைத்
திட்டமென்றுமுத்திரையுட்சிக்கென்றும்-கட்டிரொக்கம்

சேர்க்குமுடிப்பென்றுஞ்சிலசில்லூர்ப்பணத்தைப்
பார்க்கிலிதுபிடிப்பார்பார்வையென்றும்-காக்கும்

தடையமென்றுந்தூக்கித்தராசாலிறுக்க
இடைகுறையுதென்றுமிலையென்றும்-புடையிருந்து

நித்தமுநோட்டக்காரர்நெஞ்சடையக்கூப்பிடுவ
தத்தனையுமுன்னுடையவாதாளி-மத்தளத்தை

முத்தாகொட்டாண்டிமுகவணையைவாசிசெம்பா
கைத்தாளம்போடுகரும்பாவா-தித்தியைக்கூட்

டாதிசாளிபாடென்றதற்கேற்கப்பரதம்
சாதித்தபாத்திரத்தைத்தான்விட்டுப்-போதித்த

பிள்ளையாரொத்துமுதற்பேரணியுங்கூட்டிநய
முள்ளசலாமெடுப்பிலொன்றெடுத்துத்-தெள்ளிமையாய்

மிக்ககவிதைவிகற்பஞ்சிலகாட்டிச்
சக்கணியிலோர்தருவுஞ்சாதித்துத்-தக்க
பதமுமபிநயத்தின்பாவரசமான
விதமுநயம்பிறக்கும்வேளை-முதலாளி

இங்கிதங்கண்டையாமற்றெங்கேபராக்குநல்ல
சங்கீதசாகித்யசம்பன்னு-எங்களிந்த்ர

காவையொத்தகோமானேகர்ணுவெனச்சிலபேர்
நாவலசத்துக்கெட்டிலையயாநல்லதென்பார்-பாவோட்டம்ரா. அகூ

ஓடுவதுநட்டுவன்மாரோகோவெனச்சிலர்கொண்
டாடுவதுமூன்றுடையவாவேசம்-பாடுகின்ற

செந்தமிழ்ப்பாட்டதனையுஞ்சின்னான்பாட்டாக்கியிங்கே
வந்ததென்றுகேட்கவொருமன்னவரை-அந்திபகல்

நெஞ்சுலைந்துபாடிநிறைவேற்றியேயதற்குப்
பஞ்சரத்நமாலையென்றும்பள்ளென்றும்-நெஞ்சுவிடு

தூதென்றுங்கோவைத்துறையென்றும்வண்ணமென்றும்
ஏதென்றுபேரிட்டுமென்னபலன்-காதுண்டாய்க்

கேளாதபுல்லரதுகேட்பரோநாலாறு
நாளாகவீட்டினடந்தலுத்து-வேளையுண்டாய்ப்

பாடியபாட்டைப்படித்தாலப்போதிலொரு
மோடியுமாய்வேறேமுகமுமாய்-ஓடிவந்து

காதுக்குளாரோகசுகுசென்றுவித்தனையும்
ஏதுக்கண்ணாவியெழுந்திருமிப்-போதைக்குப்

பாக்குவெற்றிலைச்செலவுபண்ணிக்கொளுமென்னப்
போக்குவிட்டுநாலிரண்டைப்பொத்தலடைத்-தாக்கமுடன்

அண்ணாவிவந்தாலதற்கேற்கவேபரிசு
பண்ணாதசென்மமென்னபாழ்சென்மம்-மண்ணான

தொல்லைவந்துசூழ்ந்தென்னசொல்வதுதானுச்சுதினி
நல்லதென்றுமெள்ளநழுவிவிட-வல்லமையும்

கொஞ்சத்தனமாகிக்குத்தாமற்குத்துண்டு
நெஞ்சத்துயரமொடுநெட்டுயிர்த்துப்-பஞ்சத்திற்

பிள்ளைவிற்பார்போலப்பிரபந்தம்விற்றலையும்
கொள்ளைமுற்றுமுன்னைக்குநித்தன்றே-விள்ளரிதாம்

இந்திரசாலவித்தையேற்பதொருநோக்குவித்தை
மந்திரவாள்வித்தைவாகடமாம்-அந்தவித்தை

செப்பிடுவித்தைசெலஸ்தம்பனவித்தை
தப்புவாரக்கினிஸ்தம்பவித்தை-ஒப்பிலா

வாயுஸ்தம்பிக்குமகாவித்தைமிக்கசம்ப்ர
தாயத்திலேற்றதனுசாஸ்திரவித்தை-காயத்தில் (௨௱௪)

வேஷங்கள்போடும்விநோதவித்தையாத்மவதைத் - - *
தோஷங்களெண்ணுதருன்யவித்தை-பூஷணமாய்க் - - *

கூத்தாடிக்கேற்றகொடியவித்தைசொன்னபடி - - *
ஆஸ்தானத்தேகுரங்கையாட்டுவித்தை-ஏத்தரிய - - - *

காருடவித்தையுநீகற்பித்தவித்தையல்லால் - - *
ஆருடையவித்தைசொல்லாயப்பனே-பேருடைய - - *

வங்காளமீழமலாக்காபிரதிக்கா - - - *
பங்காளங்கோவையொடுபைகோவை-அங்குள்ள - *

அச்சிசென்னபட்டணத்தோடானதொருவத்தாவி - - *
கொச்சிகொல்லமன்னூர்குழம்புமுதல்-இச்சைபெறு - - *

சீனமொடுநற்பம்மைதென்கன்னியாகுமரி - - *
கானமிகுயாழ்ப்பாணங்கற்பாடி-ஏனையுள்ள - *

கிட்டாதநீர்க்குழம்புகீழ்மாத்தூர்காலிபின்னும் - - *
எட்டாததீவுகளெங்கும்போய்-மூட்டிவந்து - - - *

கப்பன்முறிக்குங்கடலின்மீனுக்கொதுங்கித் - - *
தப்பியிடறுசிலதான்றப்பி-அப்புறம்போய் - - - *

ஆனாலுமாச்சுதரியோகரியென்று - - - *
போனாலும்போச்சுதிந்தப்பொய்யுடலூன்-வானளவு - - *

தாவுகடற்பள்ளந்தனிலேலார்சிராயைநம்பிப் - - *
போவதுமுன்றன்பொருட்டன்றோ-காவலனே - - *

மாயரசவாதமயக்கம்பிடித்தமுழுப் - - - - *
பேயரதிலேமனதுபேதித்து-தீமுகத்தில் - - - *

நிற்கரசத்தைநிறுத்துவராம்பாஷாண - - - *
வர்க்கமெல்லாங்கட்டவகைவருமாம்-பொற்குணம்போல் *

[illegible]ரஞ்சிவந்துகண்டாராமப்படிசவ் - - - *
வீரஞ்சிவந்துமெழுகாமாம்-ஈரம்போய் - - *

வங்கம்வலியமருந்தறிவாராஞ்சாதி - - - - *
விங்கங்குவளையிறங்குமாம்-அங்கே - - - *

இரும்பிலேயியமெடுக்கமருந்துண்டாம் - - - *
திரும்பியொருமூலிகையிற்செம்பாம்-துரும்புமுதற் (௨௱௰௧)

சொன்னமாமென் றுமுன்னோர் சொல்லியதாங்கந்தகத்தை
வன்னமாறுத்தயிலம்வைப்பாராம்-பொன்னிமிளை

தொட்டியரிதாரந்துத்தநாகந்துரிசு
கட்டிநவாசாரங்கர்ப்பூரம்-பெட்டிலுப்பு

வீட்டுப்பிந்துப்புவெடியுப்புடன்வளைய
லோட்டுப்போடைந்துப்புமொன்றாகக்-கூட்டியதைச்

செப்பமுடன்சேர்ந்துருகச்செம்புகளிம்பறுமாம்
அப்பிரகத்தேரசமுண்டாக்குவராம்-இப்படியே

ஒவ்வொருவரோவ்வொன்றையுன்னியிராப்பகலாக்
கவ்வைபிடித்திறுவேகங்கணமாய்-அவ்வவர்தம்

வீட்டிலுள்ளதட்டுமுட்டுவிற்றுமாற்றுதுமனை
யாட்டிதனைவிற்றுமதற்கேற்க-நாட்டிலுள்ள

கட்டுசரக்கெல்லாங்கடையிலேவாங்கியதில்
மட்டறப்பூஞ்சாராயம்வார்த்தரைத்துத்-தட்டும்

எருவிற்புடம்போட்டெடுத்தபின்புமுட்டைக்
கருவிட்டரைத்துக்கழுவிப்-பருவமதாய்

வாய்விரிந்ததாழிக்குள்வைத்துச்சிலசாமம்
தீயெரிந்துகாய்ந்துசிவக்கையிலே-பேய்முசுட்டைச்

சாறுங்கையாந்தகரைச்சாறும்பொன்னாங்கண்ணிச்
சாறும்பசுந்தும்பைச்சாறும்விட்-டேறச்

சுருக்குக்கொடுத்ததைச்சிந்தூரித்துச்செம்பை
உருக்கித்தெளியுமட்டூதிப்-பெருக்கமுடன்

சொன்னவயிரவன்பேர்சொல்லியந்தசிந்தூரம்
தன்னையதிற்போட்டசமையத்தே-என்னவோ

வன்னஞ்சிவக்குமதைமாற்றிறுலென்றுகண்டு
சொன்னஞ்சரிகூட்டித்தொந்தித்துப்-பின்னையதில்

வங்கத்தைக்குத்திவிடவங்கமும்போய்முன்சொன்ன
தங்கத்தையுங்கெடுத்துத்தாழ்ச்சியாய்-அங்கே

கரிகொண்டகாசுமுதல்காணுமோவீணே
ஆரி[illegible]மாய்க்கிடக்குதையோ-வரிகண்டா (௨௫௪)

இவ்வாறுகெட்டவர்களெண்ணிறந்தகோடியுன்னைச் - - *
செவ்வாகக்கண்டவரோசீமானே-அவ்வளவோ - - - *

மண்ணாசைபெண்ணாசைமற்றுமுள்ளவாசையெல்லாம் - - *
ஒண்ணாதெனவெறுத்தயோகியர்கள்-பண்ணுதவ - - *

மாண்புடையோரொன்றுனவஸ்துவைக்கண்டாலுமுன்னைக் - *
காண்பதிலேயாசைகணக்குண்டோ-வீண்பொழுது - *

போகாதென்றுன்னைப்புறம்பாக்கடன்கொடுத்து - - *
வாகாநியாயவட்டிவாங்காமல்-ஆகாத் - - - *

தினவட்டிவாங்குமந்தச்சீர்கேடர்சற்றுன் - - - *
மனதிற்குறிப்பறியமாட்டார்-தனதாய்நீ - - *

வைத்தவட்டிதப்பாமல்வாங்கிக்கொடுப்பதிலே - - *
மெத்தமகிழ்ந்துன்மேல்விருப்பமுற்று-நித்தவட்டி - *

கட்டளையாயுண்டுடுக்கக்காணுமேசைம்முதற்கு - - *
நட்டமில்லையென்றுநடக்குநாள்-வட்டியிலே - - *

தாழ்ந்துகொள்வாயப்பாற்றறுகிமுதலுங்கூட - - *
வீழ்ந்துகொள்வாய்நல்லவிளையாட்டு-வாழ்ந்திருக்குங் - *

கொற்றவர்தாமென்றுசிலர்கொத்துச்சரப்பணியும் - *
சற்றுமறுவில்லாச்சவுக்களியும்-வெற்றிபெறும் - - *

அஸ்தகடகமதிகவிலைமோதிரமும் - - - - *
இத்தனையும்பூட்டியிறுமாந்து-முத்துவடக் - - - *

கண்டசரமுங்கழுத்துமாயேறிவருந் - - - *
தண்டிகையும்போர்த்திட்டசாலுவையும்-ஒண்டரிகக் - *

காறர்களும்வல்லயமுங்கர்ச்சிதராவுத்தர்களும் - - *
ஏறுகுதிரைப்பவுஞ்சும்யானைகளும்-கூறுகின்ற - *

[illegible]டியமுங்காளாஞ்சிக்காறர்களும்யானையின்மேற் - *
கொட்டியடம்மாரகோஷ்டிப்பும்-எட்டிய - - *

பூரிகைநாககசுரமும்புடைநின்று - - - - *
காரிகையார்வீசுங்கவரிகளும்-பாரினடை - - *

தம்பட்டமுமவர்கடம்பட்டமுமனந்து - - - *
கண்பட்டவாழ்வலவோகண்ணரா-கும்பிட்டேன் (உசக)

வேலைநெடுஞாலத்தின்மெல்லியர்க்கெல்லாங்கழுத்தில் - *
மாலையிடவந்தமணவாளனே-சோலிபண்ணிக் - - *

காதலவரைத்தப்பிப்போய்க்கள்ளப்புணர்ச்சிசெயுங் - *
கோதையருக்காசைக்கொழுநனே-பேதைதனில் - - *

வாங்குதிருவாங்கிமறுகளவுபார்த்திருக்கும் - - - *
ஆங்கவர்தங்கள்ளமுறைக்கண்ணனே-ஓங்குகுலம் - *

தந்தரத்துக்கொவ்வாதுதாழ்ந்தகுலமானாலும் - *
வந்தெடுத்துப்பெண்கொடுக்குமாமனே-தொந்துமெத்தக் *

கெட்டவன்கீழ்ப்பெண்டிருக்குங்கிள்ளைமொழியாள்வலிய - *
வட்டமிடுங்கைச்சரசமச்சானே-நட்டணைசேர் - - *

கூத்திமாரோடிருந்துகோட்டிகொள்ளநாலிரண்டு - *
பேத்திமாருண்டுபண்ணும்பேரனே-நாத்திருந்த - *

ஓதுகலைஞானமுள்ளதெல்லாங்கற்றுநன்றாச் - - - *
சாதிக்கவைக்குந்தகப்பனே-பேதிக்கப் - - - *

பேய்க்கொடியகானம்புகுந்தாலுமவ்வனத்தில் - *
வாய்க்கினியசோறூட்டுமாதாவே-பேய்க்குணங்கள் - *

ஆனாலுங்காமனெனுமண்ணனுக்குச்சொன்னவண்ணம் - *
தானாகப்பாடுபடுந்தம்பியே-தேனாரும் - - - *

பூங்குழலாள்வீட்டிற்பொழுதுடனேதூதுசெல்லும் - *
பாங்கனுக்குமுன்புசெல்லும்பாங்கனே-நீங்கரிய - - *

காட்டிலேபோய்க்களவுகாட்டாமல்வெட்டுமரம் - - *
மூட்டிவேதீவெளிச்சமூட்டாமல்-கூட்டமிட்டுக் - - *

கைவேலிக்குள்ளேகலையாமன்மாவுத்தர் - - - *
நெய்வேலெடுத்ததட்டிநில்லாமல்-மெய்பிணைக்குஞ் - - *

சோட்டானையில்லாமற்றோகைமார்கும்பமுலைக் - -
கோட்டானைவந்துவிழுங்கொப்பமே-நாட்டிலுள்ள - *

சித்தர்கள்கூடிச்செபியாமலாங்கவர்தம் - - - *
புத்திரரோதோபுலம்பாமல்-மொய்த்துநிற்கும் - *

ஆளரசமில்லாமலாயிழையார்க்குலெனும் - - - *
வாளரசமுள்ளரக்குமந்திரமே-நீளவொரு - (௨௯௪)

மூங்கிற்கழியின்முடிந்தகயிறில்லாமல்
தூங்கச்சிறியவுண்ணடைதூக்காமல்-நாங்குழலை

வள்ளுகிராலெற்றுமன்மாதர்சிறுகணைக்காற்
றுள்ளுவராலிழுக்குந்தூண்டிலிலே-கள்ளுண்ணத்

தேன்மறுகிவீழுஞ்செறிகுழலார்கள்ளவிழி
மான்மறுகவீழுமணிவலையே-தான்மறுகி

அங்கொலியல்கூடிநிற்குமன்னநடையாரிடத்திற்
சங்கொலியுண்டாக்குந்தடாகமே-துங்கமுலை

குன்றணைந்தமின்னார்கொடியிடையாஞ்சிங்கத்தைச்
சென்றணைந்துதூக்கிவருஞ்சிம்புளே-வென்றிவிழி

மாவடுவையொப்பார்மனதிலபிமானமெனுங்
காவலழிக்குமதகைக்களிறே-பாவையரிற்

பேசுமவுனம்பிடித்துப்பேசாதார்வாய்க்குமுத
வாசமலரைத்திறக்குமாமதியே-ரோசமுடன்

முந்தானைபோர்த்துமுலைப்பாற்கவிழ்ந்தமுகச்
செந்தாமரைமலர்த்துஞ்செங்கதிரோ-இந்துவைநேர்

நெற்றிமடமின்னார்நிதம்பத்துகில்குலையச்
சுற்றியடிக்குஞ்சுழல்காற்றே-பற்றியொரு

தட்டுடுத்தசேலையுமாய்த்தையனல்லாரோடிவர
வட்டமிட்டுப்பெய்யுமழைமாரியே-ஒட்டமிட்டு

வெட்டிவெல்லக்கூடாவினையையரைநாழிகைக்குள்
கட்டிவெல்லக்கச்சைகட்டுங்காவலா-இட்டமுடன்

ஊரெல்லாஞ்சுற்றியொருவிடத்துந்தங்காமல்
பாரெல்லாஞ்சுற்றிவரும்பக்ஷியே-நேரிலே

[illegible]ட்டுப்படாமன்மதமாயொருத்தருக்கும்
கட்டுப்படாக்கொடுவைக்காளையே-முட்டாளாய்ப்

புந்தியில்லாரானும்புந்தியெல்லாந்தந்துகன
தந்தியெல்லாமுண்டாக்குந்தாஷ்டிகா-முந்திநீ

எவ்வளவுண்டாயிருந்தாயென்றாலுமவ்வளவுக்
கவ்வளவுவீறுபண்ணுமாங்காரா-செவ்வியர்பால் (௨௭௯)

நூற்றுவரைக்குண்டானானூறிருநூறாகியப்பால்
ஆற்றுவரத்தாப்பெருகுமையனே-வேற்றுமொரு

வஞ்சகமின்றிமதுரைவழியோரலைபிடித்
தஞ்சலிலேயோடியலைவாரும்-பஞ்சமோர்

ந்யாயத்தொழிலைவிட்டுநட்டநடுக்காடுதொறும்
ஆபத்துறைகாத்தலைவாரும்-காயத்தில்

நூலைத்தரித்திருந்துதூறுமலையேறிநித்தம்
சேலைச்சுமடுசுமப்பாரும்-ஏலமலைக்

கல்லடித்துவீழ்த்துக்கடவுளர்தம்மாலயத்தைச்
செல்லுமிடங்கல்விட்டுச்செய்வாரும்-சல்லிகளை

மாறெடுத்துத்தூர்த்துமரமறுத்துஞ்செங்கலுக்கு
நீறெடுத்துமுட்டாளாய்நிற்பாரும்-கூறுவதென்

ஆர்க்குமுயிர்மேலாசையானாலுமெண்ணாமற்
போர்க்குவினையத்தலத்திற்போவாரும்-பார்க்குங்கால்

நாளிற்குறையேற்றினாலொருவனேறிவாத்
தோளிற்சிவிகைசுமப்பாரும்-நாளிட்டுச்

சோற்றுக்கணாக்கால்காலென்றுதொகைவகையோ
டேற்றிப்பணச்சோறிடுவாரும்-காற்றுக்கும்

வெய்யிலுக்குமஞ்சாமல்வேற்றூரிற்கொண்டுவிற்றுப்
பைமுதற்குமேல்வரத்துப்பார்ப்பாரும்-கைசலிக்க

அங்காடிவிற்றுமரிப்பரித்துங்கால்பாதி
தொங்காதோவென்றுசுழல்வாரும்-தங்காமல்

ஒற்றைமரமேறியொலிகடலின்மீன்பிடித்து
விற்றுநரகில்விழுவாரும்-பற்றிநடந்

தாராகிலுங்கொடுத்தாலாலிங்கனதானம்
சோராமல்வாங்கத்துணிவாரும்-ஓரொருவர்

வல்லமைகள்சொல்வதென்னமானிடொல்லாமுன்னை
யல்லதுதேடும்பொருளேதாண்டவனே-சொல்லக்கேள்

மாயப்பிரபஞ்சமெல்லாம்வாவாவுனதுசம்ப்ர
[illegible]ரபஞ்சமிதுசத்தியமே-போயப்பால் (உ௬௪)

உருடனே சொல்ல துன்னையல்லாமற் காமநலம்
சிருடனையின்பஞ்செலியாதே - பேரழகிற்
சிவகனையாகிலு நீசேர்ந்திராயாகி லொரு
பாலவயதானாலு முகம்பார்ப்பாரோ - வாவாவுன்
வீட்டிலே நான்வரத்தான் வேளைகிடையாதோசி
மாட்டிபே சென்றாலும் வாய்திறவாள் - கேட்டால்
ஒருத்தலை நோவாமுடம்புசுரத்தால்
வருத்தமாங் காதில்வலியாம் - பொருத்தெல்லாம்
கட்டுவிட்டுக் கால்கைகடுக்குதாஞ் சந்தியிற்பேய்
தொட்டுவிட்டத்தாலே துவளையாம் - விட்டுவிட்டுக்
காயுசாமத்தோடே கண்ணேறுக்காடாம் வயத்தில்
வாயுவா நீர்ப்பாடுவந்ததாம் - தாயார்க்குப்
பித்தமாம் வாந்திபிராந்தியாமாயாசம்
மெத்தவாஞ் செவ்வாய்க்கும் வெள்ளிக்கும் - சுத்தமா
மற்றொருவர்கிட்டவரப்படாதாந் தெய்வக்
குற்றமாமுண்மருந்துகொண்டாளாம் - சற்றல்ல
பத்தியமாமாரோ பணையங்கொடுத்தொரு
முத்துவண்ணச்சேலையாமூந்தியாம் - மெத்தவஞ்சம்
விள்ளுவதுநீயில்லர் வேளையிலந்நீலியர்க்குக்
கொள்ளைவிளைவதென்ன கொஞ்சமோ - வள்ளலே
மூக்கறையானாலு மொண்டிகுருடானாலும்
ஆக்கமுள்ளசாதியிழுக்கானாலும் - நோக்கமுடன்
கண்ணாரவுன்னையங்கே கண்டுவிட்டாலிங்குவர
ஒண்ணாதோ கூத்திமாரொட்டாரோ - பெண்ணரசி
மாப்பிள்ளைநீயென்று மதனிமார்வாராரோ
[illegible]பிடென்றுமாமிமார்கூறாரோ - மூப்பாயி
பார்க்கவந்தாற்போலவொருபக்கத்திருந்துடம்பு
வேர்க்குதெனப்பேர்த்திமார்வீசாரோ - ஏற்கையுடன்
மிக்கசிறுபாக்கும் வெற்றிலையுந்தான்சுருட்டித்
தக்கொழுந்திமார்தாராரோ - அக்கணமே (சுாசு)

நோயெங்கேபோமோநொடிக்குமுந்திக்கொல்லுமந்தப்
பேயெங்கேபோமோபெருமானே-நாயகிமார்

கூச்சமுமாய்ச்சற்றேகுணலையுமாய்க்கொஞ்சுதலைப்
பேச்சுமாய்ப்போர்த்தபிடவையுமாய்-வாய்ச்சதொரு

பாடகமுங்காலுமாய்ப்பாக்கொதுக்குங்கையிலிட்ட
சூடகமுங்கொங்கைதுலுக்குமாய்-ஆடகப்பொற்

சுட்டியின்கீழ்வந்துகவிழ்ந்துநிற்பதோகளப
வட்டமுலைகாட்டிமறைப்பதோ-பெட்டிதனில்

வானைப்பொடியெடுக்குமார்க்கம்போல்வந்துமெள்ளக்
கூடிக்கலந்திருந்துகொள்வதோ-வேடிக்கை

பாக்குக்கொடுக்குமந்தப்பாசாங்கோசெம்பவள
வாய்க்குள்ளேபுன்சிரிப்பின்மார்க்கமோ-நோக்கமாய்ச்

சேலையொருதட்டுடுக்குந்தீவாமோபூங்குழலின்
மாலைகுலைத்திடுமம்மாயமோ-சாலமென்ன

சொல்லுவேன்பாரத்தனைமுலைகண்மார்பழுந்தப்
புல்லுவார்மேனிபுளகிப்பார்-மெல்லப்

பிடவையவிழ்ப்பார்பிணைந்திறுகக்கட்டித்
துடையைநெருக்கச்சொலுவார்-இடையை

நெளிப்பார்கவுளைநெருக்கியிதழூறல்
அளிப்பார்குழைந்துவசமாவார்-களிப்பாக

முத்திடுவார்முத்தமுகப்பார்செவிக்குள்ளே
கத்துகுரலெழுப்பிக்காட்டுவார்-தத்தரமாய்

மேற்கொள்வாரார்மேல்விசாரமுனக்கென்றழுது
மார்க்கமாக்கண்ணீர்வருவிப்பார்-வேற்கருங்கண்

பூசலாடக்காதும்பொன்னுங்கிடந்துதுவண்
டூசலாடக்கொப்புடனாட-வாசமலர்க்

கூந்தலவிழ்ந்துகுளிர்ந்தமுகமறைப்பக்
காந்தளங்கைநீக்கிவெளிகாண்பிக்க-மாந்தளிர்ப்பொன்

மெய்யுஞ்சிலிரொன்னமிக்கசீர்த்தாடனஞ்செய்
கையா[illegible]ளிரொன்னக்கண்ணென்னும்-மையெழுதும் (கஉச)

கூற்றுஞ்செவேலென்னக்கொவ்வைமணிவாய்ப்பவளம் - *
வேற்றுக்குணமாய்வெளேலென்ன-நாற்றிசையும் - - *

கூட்டுபொடிவாடைகுழீசொன்னக்கோலமுன்கை - - *
காட்டுதொடியோசைகலீரொன்ன-ஈட்டுகுறு - - *

முத்தனையவேர்வுமுகமும்பளபளெனத் - - - *
தத்துமணிச்சுட்டிதளதளெனப்-பத்திபடும் - - *

ரோமத்தொழிக்கினுதரச்சுழியெறியச் - - - *
சேமித்தகாமத்திவலைசிந்திப்-பூமெத்தை - - *

எங்குமணங்கமழவேகவடம்புரளக் - - - *
குங்குமத்தங்கக்குடங்குலுங்க-அங்கே - - - - *

மருவிமருவிவலசாரிவந்து - - - - *
திரியுமிடசாரிதிரும்பிப்-பெருகுதையா - - - *

போகமெனக்குப்பொறுதுபொறுதென்று - - *
மோகமழலைமொழிபதறித்-தாகமுமாய்த் - - - *

தள்ளாடிச்சொல்லுந்தளர்நடையும்பாவனையும் - - *
கள்ளாவுன்மீதில்வைத்தகாதல்காண்-விள்ளுவதென் - *

உன்னாலேயிவ்வாறுடன்றூறியப்பாடுபட்ட - - - *
மின்னாரைச்சும்மாவிடுவாயோ-முன்னே - - - *

மரியாதையுள்ளமனிதரைப்போற்கள்ளா - - - - *
தெரியாமலூரிற்றிரிந்து-வரிநெடுங்கட் - - - *

கன்னியருக்குள்ளேகணக்காகக்கேட்டவட்குச் - - - *
சொன்னபணயந்தொகையாக-முன்னே - - - *

கொடுத்தனுப்பிராத்திரிபோய்க்கோலாகலமாய்ப் - - *
படுத்தலுத்தபின்னுறக்கம்பார்த்துக்-கெடுத்துவிடச் - *

சொக்குப்பொடியெடுத்துத்தூற்றியுடைமையெல்லாம் - *
[illegible]காத்தவண்ணங்கழற்றியே-ஒக்கப்பின் - - - *

வேவாள்விடாமல்விடியவொருசாமமெனப் - - *
போவார்களுன்னுடையபோதிப்பு-நோவாக - - *

மாயமருந்தையிட்டும்வாடைகுளித்துஞ்செபித்தும் - *
தூயதிருநீறுநெற்றிதொட்டிட்டும்-நாயகனாய் - [illegible]

போட்டிசெய்துந்திட்டிப்பொருள்பறித்தபாவமிதோ - *
காட்டியதென்றெல்லோர்க்குங்காண்பிப்பாய்-கேட்டதெல்லாம் *

உள்ளதுள்ளதென்பார்களுட்கபடங்கண்டிருந்தும் - *
வெள்ளைவெள்ளையென்பார்கண்மேதினியோர்-எள்ளளவும் - *

தேறுவதிங்காரலுந்தேறப்படாதுன்னைக் - - - *
கூறுவதிங்கென்னாலேகூடுமோ-பேறுதரும் - - *

பொன்னேநவமணியேபுண்ணியவானேயுலகில் - - *
உன்னாலேமுற்றுததொன்றுண்டோ-மின்னார்க்கு - - *

மெய்யன்பனானதிருவெங்கடேசேந்திரனென் - - - *
ஐயன்கருத்திலபிமானித்துத்-துய்யதிரு - - - *

நெல்லைநகர்வாழுநிமலனுக்குந்தென்னிமய - - - *
வல்லியெனுஞானவடிவாட்கும்-நல்ல - - - *

திருக்கலியாணத்திருநாண்மிகவும் - - - - *
பெருக்கமுடன்செய்வித்தபின்பு-மருக்கமழ்பூஞ் - - *

சோலைசெறிநெல்வேலிசேர்தோணிறையக்காந்திமதி - - - *
மாலையிடுமாயிரக்கான்மண்டபத்தே-வேலைவிடம் - - *

உண்டபெருமானையுண்மைமறைப்பொருளை - - *
சண்டனைமுன்னாளுதைத்ததாளானைப்-பண்டுபதி - - *

னாறாயிரம்வருடமம்புவிக்குவேந்தாகி - - - *
மாறாமுடிதரித்தவானவனை-வீறானத் - - - - *

தாம்ப்ரசபையானைத்தவளவெள்ளிவெற்பானை - - *
மேம்படுசெம்பொன்மலையின்வில்லானைப்-பாம்பணிந்த - *

நீற்றொளியுமேனியுமாய்நின்றசீமானதிரோ - - *
தோற்றியமெய்ஞ்ஞானச்சுடர்க்கொழுந்தை-மாற்றரசர் - *

வெங்கோலைநீக்கியெங்கள்வெங்கடேசேந்திரர்க்குச் - - *
செங்கோல்கொடுத்தசந்த்ரசேகரனை-எங்கள் - - -

அனவரதநாயகனையாண்டவனைச்செம்பொன் - - *
வனசமலர்ப்பாதம்வணங்கித்-தினமுமிருந் - - - *

தென்னான்கறம்வளர்த்தவீச்வரியைத்தென்னிமயப் - *
பெண்ணாகியண்டமெல்லாம்பெற்றவளைக்-கண்ணாலே - (௫௰௪)

காணத்தெவிட்டாதகட்டழகியைப்பசும்பொற்
பூணுக்கிசைந்ததெய்வப்பூங்கொடியைச்-சேணுயர்ந்த

தண்டலைசூழ்காழிவருசம்பந்தப்பிள்ளைக்குப்
பண்டுமுலைப்பால்கொடுத்த பார்வதியைத்-தொண்டருக்கோர்

ஆவியைக்கொத்தோடென்னையாண்டவளைக்காந்திமதி
தேவியையான்கண்குளிரச்சேவித்தேன்-பூவுலகில்

வாழிதிருவேங்கடநாதன்வம்சமெல்லாம்
வாழியென்றுமுக்காலும்வாழ்த்தினேன்-சூழுமத

யானைபணிவாசலானையருட்கடலை
ஞானமறைநாலுமுணர்நாயகனைத்-தீனர்பெறு

தாரித்திரியமெனச்சாற்றுமந்தகாரத்தைத்
தூரத்துரத்துகொடைச்சூரியனைத்-தேருற்று

வண்ணப்பொன்மேனியென்றுமார்க்கண்டன்போலிருக்க
விண்ணப்பஞ்செய்துநன்றுவேண்டினேன்-கண்ணுக்குப்

பாங்கானகாட்சியெல்லாம்பார்த்தேனெவருக்கும்
பூங்காம்வேளைவெல்லப்போகாதே-ஆங்கே

திருத்தட்டையேந்திநிற்குந்தேவடியார்தம்முள்
ஒருத்திக்குமால்கொண்டுழன்றேன்-கருத்திற்

குடிபுகுந்தமாதுபேர்குங்குமப்பூங்கோதை
அடிகளைநீகண்டாலறிவாய்-துடியிடையாள்

பூண்டுபொறுத்திட்டபூஷணமும்பொங்கமுமென்
ஆண்டவனேநீயல்லாலார்தந்தார்-வேண்டுபல

மாந்தரங்குநட்பெனினும்வாவாவிலைமாதர்க்
காந்தரியமுன்னிடத்திலல்லவோ-காந்திபெறு

[illegible]லவளையிட்டகொடுங்கையிலேநான்படுத்த
காலமல்லவோவெனக்குக்கண்ணுறங்கும்-நீலி

கொலைக்கருங்கண்பாய்ந்துகுடைந்திடுமென்மார்பில்
முலைக்கருங்கண்பாய்ந்தாலேமுக்யம்-பெலக்கத்

துணைப்பணநீகைபுகுந்தாற்றேகைமடமின்னாள்
அணைப்பணமென்கைக்குள்வசமாமே-வணைப்புறத்தில் ([illegible])

ஒருபெருமாமேகம்பெய்யவந்தபோதுமயில் - -
ஆடுவதல்லாக்காலமையுமோ - ஓடுவதோர் - - -

வெய்யவனைக்கண்டுவிரிவதல்லாற்பூங்கமலச் - -
செய்யமலர்மகிழ்ச்சிசெய்யுமோ - ஐயாநீ - - -

தூதுசென்றால்வந்தெனதுசோகந்தணிப்பரந்த - -
மாதுதன்னைப்போயழைத்துவா - - - (ந௪)



பணவிடுதூது - முற்றிற்று.

அச்சிற்பதிப்பித்தானூல்கள்.

	விலை-ரூ.		விலை
கதாசிந்தாமணி - -	உ௩.	குமரேசசதகம். - - -	[illegible]
தாயுமானவர்பாடற்றிரட்டு.	ந௨.	வருணகுலாதித்தன்மடல்	உ[illegible]
இலக்கமுதலிய வடங்கிய அளவைப்பெயர்த்தொகுதி.	௩.	கூளப்பநாய்க்கன்காதல் -	[illegible]
விறலிவிடுதூது. - - -	க௨.	தண்டலையார்சதகம். - -	[illegible]
எண்சுவடி பெருகுழி சிறுகுழி வருஷப்பிறப்பு. - - -	கவ.	பணவிடுதூது. - - -	[illegible]

இப்போது பதிப்பிக்கப்படுகிறநூல்கள் திருப்புகழ் காமரசமஞ்சரி-மதனவிஸ்தாரமாலை.........................

இனிமேல் பதிப்பிக்கப்படுவதுகள்.

கலிங்கத்துப்பரணி-இருசமயவிளக்கச்சண்டமாருதம்-சதுர்வேததாற்பரியசங்கிரகம்-வியாசபுசஸ்தம்பம்-பரமதநிக்காரம்-க[illegible]க்கதிகாரம்-திருத்தொண்டருலா-நீதிசாரம் - தமிழறியும்பெருமாள்சரித்திரம்-பாகமுறை-சிற்றண்டிக்கோவை-முதுமொழிக்காசி-சிறுபஞ்சமூலம் - ஸ்காந்தகீர்த்தனை - ஆசாரக்கோவை-வ[illegible]ச[illegible]கூட்டம்- வழக்கப்பழமொழி-வழக்கத்திரிகடுகம் இருசொல்ல[illegible]ங்காரம்-நாத்திருத்தம்-தமிழ்நாவலர்சரித்திரம்-வண்ணத்திரட்டு[illegible]தத்திரட்டு- சித்திரக்கவிகள்-முக்கூடற்பள்ளு- வேளூர்க்குறவ[illegible]ஆஸ்தா[illegible]னமாலை-பொருள்செயல்வகை - போற்றிமாலை- சிதம்ப[illegible]
[illegible]-ந்திகலம்பகம் திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்...